THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு விவசாயிகளும் செலவில் ஒரு பகுதி ஏற்றுக்கொள்ள முன் வந்தால், அதற்குப் பிறகு இதை நிறைவேற்றுவதில் ஒன்றும் தாமதம் இருக்காது.

SRI A. VEDARATHNAM : வாய்மேடு, தென்னநாடு பம்பிங் ஸ்கீம் வேலை துவக்குவதற்கு இல்லாத முறையில், ரயத்துகள் 1½ ரூபாய் ஸ்டாம்பு பேப்பரில் எழுதி 14 ரூபாய் சொச்சம் ரிஜிஸ்டரேஷன் பீஸ் கட்ட வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக ரயத்துகள் தயங்கிக்கொண்டிருப்ப தால், ரிஜிஸ்ட்ரேஷன் பீஸ் குறைவாக வசூல செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் பேரில் அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது ?

THE HON SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி என்னிடம் தகவல் இல்லை. சில விவரங்களை கனம் அங்கத்தினர் எனக்கு கொடுத்தால், மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம்.

Alangulam Scheme.

120 *Q*, SRIMATHI A. S. PONNAMMAL : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பார்களா—

(அ) ஐந்து வருடங்களுக்கு முன்பே அங்கீகரிக்கப்பட்ட ஆலங்குளம் திட்டம் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் ?

(ஆ) வேலை முடிந்ததும் வண்ணான்பட்டி என்ற சிவஞானபுரத்தி லிருந்து எத்திலோடு-ஆவரம்பட்டி-பிள்ளையார் நத்தம் கண்மாய்களுக்குத் தண்ணீர் விட உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The scheme has been taken up already and the works contemplated under Part I of the scheme have been completed.

(*b*) Improvements and repairs to these tanks are contemplated under Part II of the scheme which is under examination.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—DISSCUSSION ON THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR THE YEAR 1959-60—*vont.*

MR. SPEAKER : To-day is the second day of the discussion on the Electricity Budget. How much time does the Hon. Minister want for reply?

THE HON. SRI V. RAMAIAH : Forty-five minutes, Sir.

MR. SPEAKER : The Hon. Leader of the Opposition will have fifteen minutes and the other two Party Leaders, Sri Pakkirisami Pillai and Sri Chinnadurai, will have fifteen minutes each.

SRI K. S. ARDHANAREESWARA GOUNDER : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தச் சபை முன்பு நமது மின்சார அமைச்சர் வைத்திருக்கக் கூடிய மின்சார போர்டின் 1959-60-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையை